கர்நாடக மாநில சட்டப் பேரவைத் தேர்தல்: எல்லையோர மதுக் கடைகளை மூட உத்தரவு

கிருஷ்ணகிரி, மே 2: கர்நாடக மாநில சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாநில எல்லைகளில் உள்ள 12 மதுக் கடைகளை 3 நாள்களுக்கு மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியான செய்திக் குறிப்பு:

கர்நாடக மாநில சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு மே 10-ஆம் தேதி நடைபெறுகிறது. இதனிடையே தேர்தல் நடைபெறும் கர்நாடக மாநிலம் முழுவதும் மே 8 முதல் 10-ஆம் தேதி வரை மதுக் கடைகளை மூட தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், அந்த மாநில எல்லையில் உள்ள தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மாநில எல்லையோரம் உள்ள மதுபானக் கடைகள் மே 8 முதல் 10-ஆம் தேதி வரையில் மூட அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கர்நாடக மாநில எல்லையில் 5 கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ள வேப்பனப்பள்ளியை அடுத்த நாச்சிக்குப்பம், மத்திகிரி - கர்னூர், அஞ்செட்டி - கோட்டையூர், தளி, ஜவளகிரி, சொக்கநாதபுரம், பேரிகை, முகுலப்பள்ளி கேட், பாகலூர், கக்கனூர், ஒசூர் சிப்காட் பேகேப்பள்ளி கிராமங்களில் கர்நாடக மாநில எல்லையையொட்டி அமைந்துள்ள 12 டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படுகின்றன.

மேலும், மாநில எல்லையில் கக்கனூரில் மது விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் உணவகம், சேவகானப்பள்ளியில் மது விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் உணவகம் ஆகியவையும் மூடப்படுகின்றன. இவற்றில் 8-ஆம் தேதி மாலை முதல் 10-ஆம் தேதி நள்ளிரவு வரையில் மது விற்பனை செய்ய அனுமதி கிடையாது. இந்த உத்தரவை மீறி விற்பனையாளர்கள் மதுக் கடைகளை திறந்தாலும், விற்பனை செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணல் கொள்ளையைத் தடுத்தால் அதிகாரிகள் கொலை செய்யப்படுகிறார்கள்

தம்பிதுரை எம்.பி.

ஒசூர், சூசுவாடியில் செய்தியாளர்களைச் சந்தித்த மக்களவை முன்னாள் துணைத் தலைவர் மு.தம்பிதுரை.

ஒசூர், மே 2: தமிழகத்தில் மணல் கொள்ளையைத் தடுத்தால் அதிகாரிகள் கொலை செய்யப்படுகிறார்கள் என எம்.பி. தம்பிதுரை தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்கத்தின் சார்பில் ஒசூர், சிப்காட் ஆர்.டி.ஓ. அலுவலகம் அருகில் உள்ள டெம்போ ஓட்டுநர்கள், உரிமையாளர்கள் அண்ணா தொழிற்சங்கம், அசோக் லேலண்ட் அண்ணா தொழிற்சங்கம் ஹைடெக் இண்டஸ்ட்ரீஸ் உள்ளிட்ட நிறுவனங்களில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஜே.எம்.சீனிவாசன் தலைமையில் மே தின விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் முன்னாள் மக்களவை துணைத் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான மு.தம்பிதுரை கலந்து கொண்டு தொழிற்சங்கக் கொடியேற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி, முன்னாள் எம்எல்ஏ சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

அதனைத் தொடர்ந்து, ஒசூர், சூசுவாடியில் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து அதிமுக எம்.பி. தம்பிதுரை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மணல் கொள்ளையைத் தடுக்க வேண்டும் என்பதற்காக ஜெயலலிதா, என்னை கரூரில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடச் செய்தார். தற்போது அங்கு மணல் கொள்ளை நடந்து வருகிறது.

தாமிரவருணியில் மணல் கொள்ளை, பாலாற்றில் மணல் கொள்ளை என எங்கு பார்த்தாலும் மணல் கொள்ளையாக உள்ளது. இந்த மணல் கொள்ளையைத் தடுக்க வந்தால் அதிகாரிகள் கொலை செய்யப்படுகிறார்கள். சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது என ஸ்டாலின் கூறுகிறார். ஆனால், மணல் கொள்ளைகளும், மனிதக் கொலைகளும் நிகழ்ந்துக் கொண்டிருப்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

ரஷ்ய புரட்சியாளர் ஸ்டாலின் பெயரை வைத்ததாக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி கூறினார்.

அந்த ஸ்டாலின் ஆட்சியில் தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கின்ற வகையில், 12 மணி நேரம் பணியாற்ற சட்டம் இயற்றப்பட்டது. இதனை கூட்டணிக் கட்சிகளும், அதிமுகவும் எதிர்த்தன. இதற்கு பயந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றார். இது போன்று சட்டங்களை கொண்டு வந்தால் ஆளுநர் எப்படி கையெழுத்திடுவார் என்றார்.

இந்தநிகழ்ச்சியில், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்டச் செயலாளர் சென்ன கிருஷ்ணன், அதிமுக மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் மதன், ஒசூர் மாநகரப் பகுதிச் செயலாளர் 1-ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் அசோகா, பல்வேறு கிளைகளைச் சேர்ந்த அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

'மா பயிரை பாதுகாக்க அரசு சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும்'

கிருஷ்ணகிரி, மே 2: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா பயிரை பாதுகாக்கும் வகையில், அரசு சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் கிருஷ்ணகிரி மாவட்ட மா விவசாயிகள் பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு மா விவசாயிகள் பாதுகாப்பு இயக்க கூட்டமைப்பின் தலைவர் சௌந்திரராஜன், வரதராஜுலு, பெரியசாமி ஆகியோர் கூட்டுத் தலைமை வகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராமாமிர்தம் (பட்டப்பள்ளி), கிருஷ்ணவேணி வெங்கடேசன் (சாமல்பட்டி) ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

மா விவசாயிகள் கடந்த 5 ஆண்டுகளாக வறட்சி, பூச்சித் தாக்குதல் காரணமாக, மரங்கள் காய்ந்தும் மகசூல் பாதிக்கப்பட்டும் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகின்றனர். மா மரங்களையும், விவசாயிகளையும் பாதுகாக்கும் வகையில், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 50 ஆயிரம் இழப்பீடு வழங்க, தமிழக அரசு முன்வர வேண்டும்.

நிகழாண்டில், மாங்கூழ் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மாங்கனி கிலோ ஒன்றுக்கு ரூ. 60 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இதற்கான முத்தரப்புக் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும். இந்த முத்தரப்புக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளான எம்எல்ஏ-க்கள், எம்.பி.க்கள் பங்கேற்க அழைப்பு விடுக்க வேண்டும்.

மாந்தோட்டங்களை அழிக்கும்நிலைக்குத்தள்ளப்பட்டு இருக்கும் மா விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஆலோசனைகள், மீண்டு வர தேவையான உதவிகளை அரசு அளித்து மா சாகுபடியை பாதுகாக்க வேண்டும். மாவட்டத்தில் தரமற்ற பூச்சி மருந்துகள் விற்பனையைத் தடுக்க வேண்டும். இடைப்பருவ மா சாகுபடியால் தான் மா விளைச்சல் பாதிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கும் மாங்கூழ் தொழிற்சாலை நிர்வாகத்தினர், அரசு அலுவலர்கள், பருவ கால மாங்கனிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 60 வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

தோட்டப்பயிரான மா சாகுபடிக்கு பயிர்க் காப்பீடு இதுவரை வழங்கப்படவில்லை. வறட்சி மற்றும் மகசூல் பாதிப்பில் இருந்து மீண்டு எழுவதற்கு உறுதுணையாக மா பயிருக்கும் காப்பீடு வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்ட மாங்கனி சுவை மிகுந்தது. எனவே, சுவை மிகுந்த கிருஷ்ணகிரி மாவட்ட மாங்கனிக்கு புவிசார் குறியீடு பெற்றுத் தர வேண்டும். மா விவசாயத்தைக் காக்க அரசு சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள 10 ஒன்றியங்களிலும் அரசு சார்பில் மாங்கூழ் தொழிற்சாலைகளை தொடங்க வேண்டும். இதேபோல, மா ஏற்றுமதி மையம், மா சாகுபடிக்கு தனிவாரியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பாஜகவினர் ஆர்ப்பாட்டம்

HARAT SANCHAR NIGAM LIMITED
TELEPHONE EXCHANGE, DHARMAPURI

தருமபுரியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாஜகவினர்.

தருமபுரி/கிருஷ்ணகிரி, மே 2: பாஜக பட்டியல் அணி பிரிவு மாநில பொருளாளர் சங்கர் கொலை சம்பவத்தைக் கண்டித்து, தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே செவ்வாய்க்கிழமை பாஜகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்டத் தலைவர் அ.பாஸ்கர் தலைமை வகித்தார். பட்டியல் அணி பிரிவு மாவட்டத் தலைவர் கண்ணன் வரவேற்றார். மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஐஸ்வர்யம் முருகன், வெங்கட்ராஜ், மாவட்டப் பொருளாளர் காவேரி வர்மன், பட்டியல் அணி பிரிவு மாநிலச் செயலாளர் சாட்சாதிபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், பாஜக பட்டியல் அணி மாநில பொருளாளர் சங்கர் படுகொலையைக் கண்டித்தும், கொலையில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

கிருஷ்ணகிரியில்...

கிருஷ்ணகிரி பாஜக கிழக்கு மாவட்ட பட்டியல் அணி சார்பில் கிருஷ்ணகிரி புறநகர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, பாஜக கிழக்கு மாவட்டத் தலைவர் சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். எஸ்.சி. பிரிவு மாவட்டத் தலைவர் ரவி முன்னிலை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர், சங்கர் கொலை சம்பவத்தைக் கண்டித்தும், தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பினர்.

ஒசூரில்...

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பட்டியல் அணி சார்பில் ஒசூர், ராம் நகரில் பட்டியல் அணி தலைவர் திம்மராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் எம்.நாகராஜ், மாவட்டப் பொருளாளர் ஸ்ரீநிவாசன், மாநில பட்டியல் அணி துணைத் தலைவர் கஸ்தூரி, மாநில பொதுக்குழு உறுப்பினர் போத்திராஜு, மாவட்ட பட்டியல் அணி பார்வையாளர் ஆனந்த், மாவட்ட நிர்வாகிகள் மனோகர், இந்திராணி, முருகன், ஸ்ரீனிவாச ரெட்டி, ராஜன்னா, பிரவீன், ராஜசேகர், பார்த்திபன், மாநகரத் தலைவர்கள் ரமேஷ், மணிகண்டன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தருமபுரி மருத்துவக் கல்லூரியில் விரைவில் அதிதீவிர சிகிச்சை மையம்

டிஎன்வி எஸ்.செந்தில்குமார் எம். பி.

தருமபுரி, மே 2: தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ. 23.75 கோடியில் அதிதீவிர சிகிச்சை மையம், பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ. 12 கோடியில் தாய் - சேய் நல மையம் ஆகியவை விரைவில் தொடங்கப்பட உள்ளன. இதற்கான நிதியை மத்திய குடும்ப நலத்துறை ஒதுக்கியுள்ளது என மக்களவை உறுப்பினர் டிஎன்வி எஸ்.செந்தில்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தியறிக்கை:

தருமபுரி மக்களவைத் தொகுதிக்குள்பட்ட தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை மையம் தொடங்க வேண்டும் எனவும், பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தாய் - சேய் நல சிகிச்சை மையம், சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம் ஆகியவை தொடங்கிட வேண்டும் என மத்திய சுகாதாரம், குடும்ப நலத் துறை அமைச்சகத்திடம் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, தருமபுரி மக்களவைத் தொகுதி மக்களின் நலன்கருதி இக் கோரிக்கையை ஏற்று, மத்திய சுகாதாரம், குடும்ப நலத் துறை சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு 15-ஆவது மானியக் குழு சார்பில், தேசிய சுகாதாரப் பணிகள் திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்துக்கு மொத்தம் ரூ. 107 கோடியே 34 லட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில், முதல்கட்டமாக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 23 கோடியே 75 லட்சம் மதிப்பில் அதிதீவிர சிகிச்சை மையமும், பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ. 12 கோடியில் தாய் - சேய் நல மையமும், சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ. 1.25 கோடியில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன ஆய்வகமும் தொடங்கப்பட உள்ளன. இதற்கான கடிதத்தை மத்திய சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைத்துள்ளது. மேலும், மீதமுள்ள நிதியில் தருமபுரி மாவட்டத்தில் சுகாதார கட்டமைப்பை மேம்படுத்த தேவையின் அடிப்படையில் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அமைவதன் மூலம், தீவிர நோய் பாதிப்புகளுக்கும், தொற்றுக் காலங்களின் உரிய சிகிச்சை பெறவும் மாவட்ட மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். இதேபோல, பென்னாகரம் பகுதி பெண்களுக்கு தாய் - சேய் நல மையம் பேருதவியாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்பைகள் எரிப்பதை கட்டுப்படுத்த வலியுறுத்தல்

அரூர், மே 2: அரூரில் குப்பைகள் எரிப்பதை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

அரூர் பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. அரூர் பேரூராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நாள்தோறும் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து தூய்மைக் காவலர்கள் குப்பைகளை சேகரித்து வருகின்றனர். இந்த நிலையில், அரூரில் கோவிந்தசாமி நகர், பழைய பேட்டை, அம்பேத்கர் நகர், தில்லை நகர் , திரு.வி.க. நகர் உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளில் நெகிழிப் பொருள்கள் மற்றும் குப்பைகளை எரிப்பதாக பொதுமக்கள் புகார் கூறுகின்றனர். குப்பைகளை தீயிட்டு எரிப்பதால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதுடன், மூச்சுத்திணறல் உள்ளிட்ட நோய் பாதிப்புகள் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரூரில் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து வெளியாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முறையாக சேகரிக்க வேண்டும், குப்பைகளை தீயிட்டு எரிப்பதை கைவிட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆஸ்துமா தின விழிப்புணர்வுப் பேரணி



ஒசூரில் நடைபெற்ற ஆஸ்துமா விழிப்புணர்வுப் பேரணி.

ஒசூர், மே 2: ஒசூரில் உலக ஆஸ்துமா தின விழிப்புணர்வுப் பேரணி குணம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குணம் மருத்துவமனையில் தொடங்கிய பேரணி, பழைய தொலைபேசி நிலைய சாலை, வட்டாட்சியர் அலுவலக சாலை, நேதாஜி சாலை, ஏரித் தெரு வழியாகச் சென்று மீண்டும் ஒசூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில், குணம் மருத்துவமனை மருத்துவர் செந்தில், மருத்துவர் பிரதீப்குமார், மருத்துவர் கார்த்திக் பாண்டியன், மருத்துவர் விவேக் தங்கதுரை, செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள், மருந்தாளுநர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

kotak
Kotak Mahindra Bank
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம் – 27 BKC, C–27, G–பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை – 400 051. மகாராஷ்டிரா, இந்தியா
சேலம் கிளை – எண். 5–330, சோனியா ப்ளாஸா, முதல் தளம், ஸ்டேட் பேங்க் காலனி, AVR சர்க்கிள் அருகில், சேலம் – 636 004 தொலைபேசி எண். 0824 –4259177.

அசையும் / அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 8(6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்கள் ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 22/08/2022 தேதியில் [illegible] எடுக்கப்பட்ட சொத்துக்கள், M/s. மதுரா ட்ரேடர்ஸ் மற்றும் பிறரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 30/04/2023ம் தேதியின் படி, நிலுவையாக உள்ள தொகை ரூ. 6,70,10,329/– (ரூபாய் ஆறு கோடியே எழுபது இலட்சத்து பத்தாயிரத்து முன்னூற்று இருபத்து ஒன்பது மட்டும்) மற்றும் 01/05/2023 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்", "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" 2023 மே 23ம் தேதியன்று மின்னணு ஏல முறையில் விற்பனை செய்யப்படும்.

சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை இதற்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது மற்றும் டேவணித்தொகை ஆகியன இதன் கீழ்க்கண்ட பட்டியலில் முழுமையாகவும் குறிப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், இணை எண். 1 சார் பதிவு மாவட்டம், நாமக்கல் டவுன், A.S. பேட்டை, [illegible] பழனிசாமி தெரு, சர்வே எண். 296/4, அதற்கு டவுன் சர்வே வார்டு A, ப்ளாக் 6, [illegible] 13/9 ல் அமையப்பெற்ற 0.9634.0 ஹெக்டேர் (2.43 ஏக்கர்) இதில் உள்ள 1645 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் உள்ள புதிய கதவு எண். 151, 152, பழைய கதவு எண். 18D2B1, 18D2A வைக்கொண்ட கட்டிடம் மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்., பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது. எல்லைகள் – [illegible] – தெற்கு 20 அடி அகல சாலைக்கு – கிழக்கு வரதராஜன் இடத்துக்கு – மேற்கு
அளவீடுகள் – கிழமேல் வடபுறம் – 41–3/4 அடி, கிழமேல் தென்புறம் – 40–1/2 அடி, தென்வடல் கிழபுறம் – 40–1/4 அடி, தென்வடல் மேற்புறம் – 39–3/4 அடி., என்ற பரப்பளவு கொண்ட இடம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வருங்கால மற்றும் தற்கால கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட அல்லது நிலத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டவைகள் மற்றும் அனைத்து வழிவசதி / இதர சகல உரிமைகள் ஆகியவற்றுடன் கூடிய சொத்து.

அடிப்படை விலை – ரூ. 77,40,000/– & டேவணித்தொகை – ரூ. 7,74,000/–

மின்னணு ஏலம் மூலமான அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் –

சொத்துக்கள் ஆய்வு – விருப்பமுள்ள நபர்கள் 22/05/2023 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை சொத்துக்களை ஆய்வு செய்து கொள்ளலாம்.

டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & இடம் – 22/05/2023 அன்று மாலை 05.00 மணி வரை

1. ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் KMBL ன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரர் M/s Auction tiger, அஹமதாபாத், குஜராத் – 380 006 தொடர்பு நபர்கள் திரு. ப்ரவீன் குமார் (அலைபேசி): 7961200515/9722778828, (மின்னஞ்சல்) sales@AuctionTiger.net வலைதளம் www.AuctionTiger.net [illegible]

16. அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") எக்காரணமும் கூறாமல் ஏதேனும் விலைப்புள்ளி / விலைப்புள்ளிகளை (ஏதேனும் சொத்துக்கான) நிராகரிக்க அல்லது மின்னணு ஏலத்தை ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

17. விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலின் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர் ("AO") வாங்குபவர் பெயரில் "விற்பனைக்கான சான்றை" வழங்குவார். முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், பரிமாற்ற கட்டணங்கள், VAT, TDS, GST போன்றவற்றை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

18. விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 ல் விவரிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதன் மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

19. சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான இதர மேல் விபரங்களுக்கு வங்கியின் வலைதளம் @WWW.Kotak.com ல் சரி பார்த்துக்கொள்ளலாம் அல்லது விருப்பமுள்ள ஏலதாரர்கள் திரு. ஸ்ரீதரன் அவர்களை தொலைபேசி எண். 9916165915 மற்றும் திரு பாலமுருகன் அவர்களை தொலைபேசி எண்.8248222900 ல் அனைத்துவேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

இடம் – சேலம்
தேதி – 03.05.2023
ஒப்பம்/– (அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் – க்காக

kotak
Kotak Mahindra Bank
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
சேலம் கிளை – எண். 5–330, சோனியா ப்ளாஸா, முதல் தளம், ஸ்டேட் பேங்க் காலனி, AVR சர்க்கிள் அருகில், சேலம் – 636 004 தொலைபேசி எண். 0824 –4259177.

அசையும் / அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 8(6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

[illegible] 15/11/2019 தேதியில் [illegible] 1) M/s. [illegible] மற்றும் அதன் பங்குதாரர்கள், அதன் கூட்டு கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களான 2). திரு. S. சரவணன் 3). திருமதி C. சாரதா 4). திரு K. ரஞ்சித் குமார் 5). திரு. P. [illegible] 6). திரு. K.K. [illegible] 7). திருமதி. R. [illegible] ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு நிலுவையாக உள்ள 30/4/2023 ம் தேதியின் படியிலான தொகை ரூ. 5,87,55,016/– [illegible] மற்றும் 01.05.2023 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்", "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" 2023 மே மாதம் 23 ம் தேதியன்று மின்னணு ஏல முறையில் விற்பனை செய்யப்படும். சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை இதற்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது மற்றும் டேவணித்தொகை ஆகியன இதன் கீழ்க்கண்ட பட்டியலில் முழுமையாகவும் குறிப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இனம் எண்	விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள்
1	திரு. S. சரவணன் மற்றும் திரு K. ரஞ்சித் குமார் ஆகியோருக்கு சொந்தமான சொத்து – நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், இணை எண். 1 சார் பதிவு மாவட்டம், நாமக்கல் நகராட்சி, [illegible] சர்வே எண். 17/2 மற்றும் புதிய சர்வே எண். 177/A–2 ல் [illegible] 9, T. S. எண். 47 ல் உள்ள 0.0032.0 சதுர மீட்டர் மற்றும் வார்டு A, ப்ளாக் 9, T. S. எண். 48 ல் உள்ள 0.0030.0 சதுர மீட்டர் [illegible] 2654) இதில் உள்ள 640 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய கதவு எண்கள், 33/96, 34/97 வைக்கொண்ட கட்டிடம் [illegible] 33 / 97, 34 / 96) [illegible] 640 சதுர அடி [illegible] 12 அடி அகல சாலைக்கு [illegible] தெற்கு 12 அடி அகல சாலைக்கு [illegible] 640 சதுர அடி [illegible] 40 அடி, கிழமேல் தென்புறம் – 40 அடி, தென்வடல் கிழபுறம் – 16 அடி, தென்வடல் மேற்புறம் – 16 அடி., என்ற பரப்பளவு கொண்ட இடம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வருங்கால மற்றும் தற்கால கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட அல்லது நிலத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டவைகள் மற்றும் அனைத்து வழிவசதி / இதர சகல உரிமைகள் ஆகியவற்றுடன் கூடிய சொத்து. அடிப்படை விலை – ரூ. 17,50,000/– டேவணித்தொகை – ரூ. 1,75,000/–

மின்னணு ஏலம் மூலமான அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் –

சொத்துக்கள் ஆய்வு – விருப்பமுள்ள நபர்கள் 22.05.2023 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை சொத்துக்களை ஆய்வு செய்து கொள்ளலாம், டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & இடம் – 22.05.2023 அன்று மாலை 05.00 மணி வரை

1. ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் KMBL ன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரர் M/s Auction tiger, அஹமதாபாத், குஜராத் – 380 006 தொடர்பு நபர்கள் திரு. ப்ரவீன் குமார் (அலைபேசி) : 7961200515 / 9722778828, (மின்னஞ்சல்) sales@AuctionTiger.net வலைதளம் www.AuctionTiger.net மூலம் நடைபெறும். 2. ஏல விற்பனை 2023 மே 23 ம் தேதியன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை [illegible]

[illegible] 19. சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான இதர மேல் விபரங்களுக்கு வங்கியின் வலைதளம் @WWW.Kotak.com ல் சரி பார்த்துக்கொள்ளலாம் அல்லது விருப்பமுள்ள ஏலதாரர்கள் திரு. அருண் குமார் அவர்களை தொலைபேசி எண். 9940181498 மற்றும் திரு பாலமுருகன் அவர்களை தொலைபேசி எண். 8248222900 ல் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம். 2

இடம் – சேலம்
தேதி – 03.05.2023
ஒப்பம்/– (அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் – க்காக